2017 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மேலூர் நகராட்சியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள மேலூர் நகராட்சிப் பகுதியின் அருகிலேயே நிலம் கண்டறிந்து கொடுப்பார்களேயானால், மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இருக்கின்ற பயனாளிகளின் பட்டியலையும் தயார் செய்து கொடுப்பார்களேயானால், அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து, ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***6558—திரு. மு.க. ஸ்டாலின்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொளத்தூர் தொகுதி, பெரியார் நகரில் இயங்கும் அரசு புறநகர் மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, சென்னையிலுள்ள

இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை, கொளத்தூர், பெரியார் நகரில் இயங்கும் அரசு புறநகர் மருத்துவமனை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால பொற்கால ஆட்சியில், அரசாணை பிறப்பிக்கப்பட்டு, 22–4–2015 முதல் இராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையின் நேரடிக் கண்காணிப்பில் தற்போது செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் இந்த மருத்துவமனை தொற்று நோய்க்கான சிறப்பு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சிறப்புப் பிரிவு இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. சிறப்பு மருத்துவர் நியமனம் செய்யப்படவில்லை. வெறும் அறிவிப்போடு அது நின்றுகொண்டிருக்கிறது. பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் தினந்தோறும் 1,300–க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அங்கு 80 முதல் 85 பேர் வரை உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த மருத்துவமனைக்கு சோலார் மின் கருவி பொருத்த வேண்டும் என்பதற்காக, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனைக்கு நான் பலமுறை நேரடியாகச் சென்று ஆய்வு செய்திருக்கிறேன். ஆய்வு செய்த நேரத்தில், அங்கு பல கோரிக்கைகள் என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டித் தரவேண்டும்; இந்த மருத்துவமனைக்கென தனியாக ஒரு சிறப்பு ஆம்புலன்ஸ் வாகனம் வேண்டும்; அதுபோல மருத்துவர்கள்,*

2017 மார்ச் 20]

செவிலியர்கள், மற்றும் பணியாளர்களுக்கென அங்கிருக்கின்ற குடியிருப்புகள் மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன; எனவே அவற்றை முழுமையாக இடித்துவிட்டு புதிதாகக் குடியிருப்புகளைக் கட்டித் தரவேண்டுமென்று பல கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் உடனடியாக கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் அரசு புறநகர்* peripheral hospital *ஏற்கெனவே* DMS*–ன் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனை* DME*–யினுடைய கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த கால ஆட்சியில் பரிசீலித்து, அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி, திங்கட்கிழமை என்று சொன்னால், இருதய நோய்க்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவு; செவ்வாய்க்கிழமை என்று சொன்னால், சர்க்கரை நோய்க்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவு; புதன்கிழமை என்று சொன்னால், தோல் நோய்க்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவு–*Dermatology, *வியாழக்கிழமை என்று சொன்னால்,* Geriatrics *என்று சொல்லக்கூடிய முதியோர்களுக்கான சிறப்புப் பிரிவுகளெல்லாம் அங்கே செயல்பட்டு வருகின்றன. இந்த உத்தரவிற்குப் பிறகுதான், ஒரு மாதத்திற்கு 30,000 என்ற அளவில் வந்து கொண்டிருந்த புற நோயாளிகளின் எண்ணிக்கை, இப்பொழுது 40,000 என்கின்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நானும் அந்த மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்றிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற மருத்துவமனைக்கு, இந்த உத்தரவிற்குப் பிறகு, 50 இலட்சம் ரூபாய் அளவிற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு,* Pulse Oximeter *போன்ற உயிர் காக்கும் கருவிகளும், மருத்துவ உபகரணங்களும் அங்கே கூடுதலாக வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன கோரிக்கையைச் சொல்கிறாரோ, அதையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த*

மருத்துவமனை நல்லமுறையில் செயல்படுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில்* Staff Nurse–*செவிலியர் பணியிடங்கள் பற்றாக்குறையாக இருக்கின்றன. எனவே, போதுமான அளவிற்கு அவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அதேபோல, அந்த மருத்துவமனையில் எலும்பு மருத்துவர் மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர் பணியிடங்களும் பற்றாக்குறையாக இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, உரிய மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில்* Sanctioned Posts–*ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் 15. அதிலே 14 மருத்துவர்கள் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல,* Sanctioned Post–*ஒப்பளிக்கப்பட்ட செவிலியர் பணியிடங்கள் 23; அதிலே 21 செவிலியர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். பொதுவாக சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், மருத்துவர்கள் அல்லது செவிலியர்களுடைய பற்றாக்குறை என்பது எந்தக் காலத்திலுமே கிடையாது. இப்போது* MRB *மூலமாக இந்திய வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 9,190 செவிலியர்களை நியமனம் செய்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடர்ச்சியாக தற்போது* MRB *மூலமாகத் தேர்வு நடத்தப்பட்டு, 1,200 மருத்துவர்களை* counselling *மூலமாக நியமிக்கக்கூடிய பணி தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டு, மருத்துவர்களை நியமிக்கக்கூடிய பணி தொடங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் குறிப்பிடுகின்ற* Ortho *மருத்துவர் பணியிடம், பெரியார் நகர் அரசு*

2017 மார்ச் 20]

புறநகர் மருத்துவமனையிலே வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

புதிய மாவட்டம்

***5236—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதியில் கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதிலே நீங்காத இடம் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருவடிகளை வணங்குகிறேன்.*

விழுப்புரம் மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாகும். இம்மாவட்டம் கல்வராயன் மலையில் தொடங்கி மரக்காணம் கடற்கரை வரை சுமார் 220 கிலோ மீட்டர் நீளமும் மற்றும் 7,217 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் கொண்டதாகும்.